அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள் வெளியீடு 7

# சைவப்பிரகாசிகை

## முதற் புத்தகம்

அச்சுவேலி
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்
எழுதியது.

யாழ்ப்பாணம்
ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
1950

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவப் பிரகாசிகை

## முதற் புத்தகம்

(இரண்டாம் வகுப்பிற்குரியது)

97946

நான்காம் பதிப்பு

அச்சுவேலி
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்
எழுதியது.

1950

விலை சதம் 40

894.8113 கு

# மதிப்புரை

மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர்
**ஸ்ரீமான் வீ. வீரசிங்கம்** அவர்கள், **B. A.** (Lond.)
எழுதியது.

ஒரு தேசத்தின் கலைவளர்ச்சிக்கு அத்தேசத்தின் சரித்திரங்கள் இன்றியமையாக் கருவி. தமிழ் நாட்டின் கலைவளமும் உணர்வும் சரித்திர உணர்ச்சியில்லா விடத்துப் பொருந்தல் அபூர்வம்.

தமிழ்க்கலை தலைகாட்டத் தொடங்கும் இக்காலத்து, சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் இயற்றிய சைவப்பிரகாசிகை என்னும் மகுடம் பூண்டு ஒவ்வோர் வகுப்புக்கும் ஏற்ற பாஷையும் பொருளையுங்கொண்ட புஸ்தகங்கள் கலைவளர்ச்சிக்குரியன.

இச் சைவப்பிரகாசிகை முதற் புத்தகம் இலேசான பாஷையில், சிறு கதைகளாகப் பாலர்க்கு உவப்ப எழுதப்பட்டிருக்கின்றது. இப்புஸ்தகம் சைவசமயக் கல்விக்கு அஸ்திபாரம் போன்றது. சைவ வித்தியாசாலைகளில் பாடப் புத்தகமாகப் பயிலத் தக்கது.

**வீ. வீரசிங்கம்,**
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | பாடம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அரிச்சந்திரன் .... .... | 1 |
| 2 | நளமகாராசன் .... .... | 2 |
| 3 | தமயந்தி .... .... | 4 |
| 4 | பட்டணத்துப் பிள்ளையார் .... | 5 |
| 5 | துராசாரன் .... .... | 7 |
| 6 | குருமொழி கேளாமை .... .... | 8 |
| 7 | கல்விச் செருக்கு .... .... | 9 |
| 8 | அரசனும் மகனும் .... .... | 11 |
| 9 | பெரியோரை இகழ்தல் ஆகாது .... | 12 |
| 10 | துருவன் .... .... .... | 14 |
| 11 | ஆண்பனை கள் பெண்பனை களானது | 15 |
| 12 | கங்காதரன் .... .... | 16 |
| 13 | பதக்கம் சாத்தியது .... ... | 17 |
| 14 | கடவுள் .... .... .... | 19 |
| 15 | காவிரிநதி .... .... .... | 21 |
| 16 | இரணியவன்மர் .... .... | 23 |
| 17 | கிருஷ்ணர் வெண்ணெய் திருடியது | 24 |
| 18 | கன்ருல் விளவு எறிந்தது .... | 26 |
| 19 | தலையைக் கல்லில் மோதியவர் .... | 27 |
| 20 | கணநாதநாயனர் .... .... | 29 |
| 21 | ஒரு புலவர் .... .... | 30 |
| 22 | தீபாவளி .... .... | 30 |
| 23 | சற்புத்திரன் .... .... | 31 |


தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

கணபதி துணை

# சைவப் பிரகாசிகை

## முதற்புத்தகம்

### 1-ம் பாடம்

### அரிச்சந்திரன்

1. இந்திரன் தன் சபையோர்களை நோக்கி, "பூவுலகத்திலே, பொய் சொல்லாதவர் உண்டோ" என்று கேட்டான். அங்கே இருந்த வசிட்டர், "அரிச்சந்திரன் சத்தியம் தவருன்" என்று கூறினர்.

2. இதனைக்கேட்ட விசுவாமித்திரர், "அரிச்சந்திரன் பொய்யன்" நான் இதனை உண்மைப்படுத்துகிறேன்; யான் அப்படிச் செய்யாது விட்டால் எனது தவத்தில் பாதியை இழந்து விடுகிறேன்" என்ருர்.

3. பின்பு அரிச்சந்திரனைப் பொய் சொல்லும்படி கஷ்டப்படுத்தினர். அதனல், அவன் தனது நாட்டை இழந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். மனைவி மக்களை விற்றான். தானும் சுடுகாட்டைக் காத்தான். ஆயினும், அவன் பொய் பேசவில்லை.

4. சிவபெருமான் உமாதேவியாருடனும், கந்தசுவாமியுடனும் தோன்றி, அவனுக்குக் கிருபை செய்தார். விசுவாமித்திரர் தோல்வி அடைந்தார். தமது தவத்திற் பாதி இழந்தார்.

---

2-ம் பாடம்

## நளமகாராசன்

1. கிருத யுகத்திலே, நளன் என்னும் பெயரை உடைய அரசன் இருந்தான். அவன் நிடதநாட்டை ஆண்டுவந்தான். அவன் நீதியுள்ளவன். எல்லா உலகத்தாராலும் விரும்பப் பட்டவன். போரில் வீரன்.

2. புட்கரன் என்பவன் நளனோடு சூதாடும்படி போனான். நளமகாராசன் அதற்கு உடன்பட்டான். அவனுடைய மந்திரிமார்கள் சூதாடுதல் கூடாது என்று



புத்தி சொன்னார்கள். நளன் அதைக் கேட்கவில்லை.

3. நளனும் புட்கரனும் சூதாடினார்கள். பந்தையம் வைக்கப்பட்டது. முதலில் நளன் வென்றான். பின்பு புட்கரன் வென்றான். சூதிலே தோல்வி அடைந்த நளன் அரசாட்சியை இழந்தான். ஆடை ஆபரணங்களையும் இழந்தான். தனது பிள்ளைகளை மாமன் வீட்டுக்கு அனுப்பினான். தன் மனைவியோடு காட்டை அடைந்தான்.

4. அங்கே அவன் பாம்பினாற் கடிக்கப் பட்டுத் துக்கத்தை அடைந்தான். இருதுபன்னன் என்னும் அரசனுக்குத் தேர் செலுத்துபவனும் ஆனான். இப்படிப் பல துன்பங்களை அடைந்தும், சிவபெருமானை மறவாது தியானித்து வந்தான்.

5. ஒருநாள் சிவபெருமான் அந்த அரசனுடைய கனவிலே தோன்றினார். அவனுக்கு அருள் செய்து மறைந்தார். நளமகாராசன் அக் கடவுளுடைய திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையினலே தனது மனைவி மக்களோடு சேர்ந்திருந்தான். முன்போலத் தனது நாட்டையும் அரசாட்சி செய்தான்.

"சூதும் வாதும் வேதனை செய்யும்"

---

3-ம் பாடம்

## தமயந்தி

1. நளன் சூதாடி நாட்டை இழந்தான். அவனுடைய மனைவி பெயர் தமயந்தி. நளன் காட்டு மார்க்கமாகப் போனன். தமயந்தி அவன் பின்னுகப் போனுள். அவர்கள் ஒருவரை ஒருவர் பிரியவேண்டி வந்தது. தமயந்தி துக்கப்பட்டு, தனிமையாகத் தகப்பன் வீட்டுக்குப் போனுள். தகப்பன் பெயர் வீமராசன்.

2. ஒரு வேடன் தமயந்தியைக் கண்டான். அவள் தனித்து வருவதை வேடன் அறிந்தான். அவன் ஒரு துட்டன். கெட்ட எண்ணங் கொண்டு அதை அவளுக்குச் சொன்னுன். அவள் உடன்படவில்லை. அவன் அவளை அவமானம்



செய்யத் தொடங்கினுன். அவள் அநேகம் புத்திகளைச் சொன்னுள். வேடன் அவற்றைக் கேட்கவில்லை.

3. தமயந்தி கற்புடைய பெண். அதை வேடன் அறிந்திலன். அவள் கோபங் கொண்டாள். உடனே வேடன் எரிந்து சாம்பராஞன். தமயந்தி தனது தகப்பன் வீட்டை அடைந்தாள்.

4. பெண்களுக்கு ஆபரணம் கற்பு. கடவுள் அவர்களுக்குத் துணையாய் இருப்பர்.

"காவலுனே பாவையர்க் கழகு"

---

4-ம் பாடம்

## பட்டணத்துப் பிள்ளையார்

1. காவிரிப்பூம் பட்டணத்திலே, சிவநேசர் என்னும் வைசியர் ஒருவர் இருந்தார். அவர் மனைவி பெயர் ஞானகலை அம்மை. அவ்விருவருக்கும் உலகம் உய்யும்படி ஒரு புத்திரர் பிறந்தார். அவருக்

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் திருவெண்காடர் என்றும் பட்டணத்துப் பிள்ளையார் என்றும் பெயர் உண்டு.

2. பட்டணத்துப் பிள்ளையார் சிவபெருமானது திருவருளைப் பெற்றவர். சிவபெருமானை ஒருகாலமும் மறவாதவர். அவர்மீது பல பாடல்களைப் பாடியவர்.

3. பட்டணத்துப் பிள்ளையாருடைய தாயாராகிய ஞானகலை அம்மை மூப்புவந்து இறந்தார். சுற்றத்தார்கள் பிணத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோனார்கள். விறகை அடுக்கினார்கள். அதன்மேல் பிணத்தை வைத்து நெருப்பு மூட்டினார்கள்.

4. திருவெண்காடர் இதனைக் கண்டு, விறகுகளை எடுத்து எறிந்தார். தாயாரது பிணத்தைத் தமது மடியின்மேல் வைத்து அழுதார்.

5. பின்பு வாழைத்தண்டுகளை அடுக்கி, அவற்றின்மீது பிணத்தை வைத்தார். சில பாட்டுகளைப் பாடியருளினார். அவர் அடுக்கிய வாழைத்தண்டுகள் உடனே நெருப்புப்பற்றி எரிந்தன. பிண



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

மும் வெந்து சாம்பலாயிற்று. திருவெண்காடர் துறவியாய் இருந்தும் தாய்க்குச் செய்யவேண்டிய தொண்டைச் செய்து நிறைவேற்றினார். இன்னும் பல அற்புதங்களைச் செய்து முத்தி அடைந்தார்.

5-ம் பாடம்

## துராசாரன்

1. ஒரு பிராமணன் இருந்தான். அவன் பெயர் துராசாரன். அவன் ஒழுக்கம் அற்பமேனும் இல்லாதவன். துட்டரோடு சினேகம் செய்பவன். கடவுளிடத்து அன்பு அற்றவன்.

2. அவன் தன்னுடைய ஒழுக்கத்தை விட்டதனால் அவனை ஒரு வேதாளம் பிடித்து வருத்தியது. அவன் காடுகளிலும் பல தேசங்களிலும் அலைந்து திரிந்தான். திரியுங் காலத்தில் ஒருநாள் தனுக்கோடி தீர்த்தத்தை அடைந்தான். வேதாளம் அவனை முதுகிலே பிடித்து அந்தத் தீர்த்தத்தில் அமிழ்த்தியது. அவன் அதில் முழுகி எழுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் முழுகியமையால், சுத்தன் ஆயினன். வேதாளம் அவனை விட்டு நீங்கிவிட்டது. அவன் அங்கே இருந்த ஒரு முனிவரைக் கண்டு வணங்கினன். அவருடைய கிருபையைப் பெற்றான். பற்பல தருமங்களைச் செய்து முத்தி அடைந்தான்.

"ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்"

---

6-ம் பாடம்

## குருமொழி கேளாமை

1. திரிசங்கு என்னும் ஒரு அரசன் இருந்தான். அவன் மனித சரீரத்தோடு சுவர்க்கலோகத்துக்குப் போக விரும்பினன். அந்த விருப்பத்தைத் தனது குல குருவுக்குச் சொன்னன் அவர் "அப்படிச் செய்ய முடியாது" என்றார். அவர் பெயர் வசிட்டமுனிவர்.

2. விசுவாமித்திரர் என்னும் ஒரு முனிவர் இருந்தார். அவர் வசிட்ட முனிவருடைய பகைவர். திரிசங்கு, விசுவாமித்திரரிடம் போனன். தனது எண்ணத்தை அவருக்குச் சொன்னன். முனிவர் திரிசங்குவைச் சுவர்க்கம் போகும்படி செய்தார். சுவர்க்கத்துக்கு அரசனாகிய இந்திரன் அவனைத் தள்ளிவிட்டான். திரிசங்கு புலம்பிக் கொண்டு நிலத்தில் விழுந்தான்.



3. முனிவர் அந்தரத்தில் ஒரு சுவர்க்கம் உண்டாக்கி, அவனை அதில் நிறுத்தினர். அவன் எல்லாராலும் இகழப் பட்டான். தான் அனுபவித்த சுகத்தையும் இழந்தான்.

"மொழிவது மறுக்கி னழிவது கருமம்"

---

7-ம் பாடம்

## கல்விச் செருக்கு

1. காசியிலே ஒரு பிராமணன் இருந்தான். அவன் பெயர் சுதன்மன். அவன் விட்டுணுவை நினைத்துத் தவஞ் செய்தான். விட்டுணு வந்தருளினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குக் கல்விச் செல்வத்தைத் தந்தருள் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தான். விட்டுணு அவனைப் பண்டிதனுகச் செய்து மறைந்தருளினுர்.

2. சுதன்மன் கல்விச் செருக்குக் கொண்டான். முறையாகப் படித்த பண்டிதர்களை நிந்தித்தான். பண்டிதர்கள் மனவருத்தம் கொண்டார்கள்.

3. பிரமதேவர் ஒரு வயோதிகப் பிராமணராய் அவனிடம் போனுர். "சுதன்மனே! நீ படித்த கல்விக்கேற்ற ஒழுக்கம் உன்னிடம் இல்லை" என்று சொன்னுர்.

4. "வயோதிகனே! நீ நூல்களைப் படியாதவன். மூப்பினுல் இப்படிச் சொன்னுய்" என்ருன். பிரமதேவர் நான்கு முகங்களுடன் வெளியாகி நின்ருர்; கோபங் கொண்டார். "நீ பெரியோர்கள் முன் கடுஞ் சொற்களைக் கூறினுய்; ஆகையால் ஊமையாவாய்" என்ருர். உடனே அவன் ஊமையானுன். மனம் வருந்தினுன். பின்பு திருக்கேதாரத்துக்குப் போய்ச் சிவபெருமானை வணங்கினுன்.



5. ஒரு நாள் அவன் ததீசி முனிவரைக் கண்டு வணங்கினுன். அவர் விபூதி கொடுத்தார். சுதன்மன் ஏற்று அணிந்தான். உடனே ஊமை நீங்கியது. பின்பும் முனிவரைக் கும்பிட்டுத் தனது ஊருக்குப் போனுன்.

"வித்தை விரும்பு; வீடு பெற நில்"

97946

8 - ம் பாடம்

## அரசனும் மகனும்

1. முற்காலத்திலே, ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு வசு என்னும் பெயருடைய ஒரு புத்திரன் இருந்தான். அவன் ஒரு சிவன்கோயிலிலே, மணலில் விளையாடிக்கொண்டு இருந்தான். அப்பொழுது ஒரு பொற்பணத்தைக் கண்டு எடுத்தான். எடுத்து அதைத் தந்தையிடம் கொடுத்தான். அவன் அதைப் பொக்கிஷத்தில் வைத்தான்.

2. கோயில் அதிகாரிகள் அரசனிடம் போனுர்கள். அவர்கள் அவனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து "உம்முடைய மகன் கோயிலில் எடுத்தபணத்தைக்கோயிலுக்குக்கொடுத்து விடல் வேண்டும்" என்றார்கள். அரசன் பணத்தைக் கொடுக்க மறுத்து விட்டான். அதிகாரிகள் திரும்பிப் போனார்கள்.

3. கோயிற்பொருளை எடுத்த பாபம் அரசனைப் பற்றியது. அன்றிரவு அவனுடைய மாளிகை நெருப்புப் பற்றி எரிந்தது. கள்வர்கள் பொருள்களைக் கவர்ந்தார்கள். அரசனும் மகனும் இறந்து வெகுகாலம் நரகத் துன்பத்தை அனுபவித்தார்கள்.

---

9-ம் பாடம்

## பெரியோரை இகழ்தல் ஆகாது

1. அங்கதேசத்திலே, கலிங்கன் என்பவன் இருந்தான். அவன் பல தருமங்களைச் செய்துகொண்டு இருந்தான். அவனிடத்தில் ஒரு யோகீசுரர் போனார். கலிங்கன் அவரைக் கண்டவுடன் எழுந்து நமஸ்காரம் செய்யாது இருந்தான்.



2. யோகீசுரர் அவனைப் பார்த்துச் சிரித்தார். கலிங்கன் அவரை இகழ்ந்தான். யோகீசுரர், "நீ பசாசாவாய்" என்று சாபமிட்டனர். கலிங்கன் அவரை வணங்கி, "யான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தான்.

3. "நீ விருத்தாசலத்துக்குப் போவாய். அங்கே உரோமச முனிவர் இருக்கின்றார். அவரைக் கண்டவுடன் இச்சாபம் நீங்கும்" என்றார். கலிங்கன் பசாசு வடிவம் ஆனான். அவன் இருக்க இடமும் இல்லாமல் அலைந்து திரிந்தான்.

4. ஒரு நாள் விருத்தாசலத்தை அடைந்தான். அங்கே உரோமச முனிவரைக் கண்டு வணங்கினான். உடனே பசாசு வடிவம் நீங்கி, மனித வடிவம் பெற்றான்.

5. முனிவர் அவனை நோக்கி "நீ இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சிவபெருமானை வணங்கு" என்றார். கலிங்



2884 C.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன் ஸ்நானம் செய்து சிவபெருமானை வணங்கினன். சிவபெருமான் அவனுக்குக் கிருபை செய்தருளினர்.

"பெரியாரைத் துணைக்கொள்"

---

10-ம் பாடம்

## துருவன்

1. உத்தானபாதன் ஒரு அரசன். அவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தார்கள். இளைய மனைவிக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அவன் பெயர் துருவன். அவன் தகப்பனுடைய மடியில் இருந்தான். அவனுடைய பெரியதாய் அதற்குக் கோபித்தாள். அவனைக் கையினலே இழுத்து விட்டாள். தன் மகனை அரசனது மடியிலே இருத்தினள்.

2. துருவன் கண்ணைப் பிசைந்து அழுது அடிக்கடி வெம்பினன். அரசன் அவனைப் பார்க்கவில்லை. புத்திரன் இதனைத் தாய்க்குச் சொன்னன். அவள், மகனை எடுத்து அணைத்துத் தனது மடியில் வைத்



துக் கொண்டு, "நீ சிவபெருமானைப் பூசை செய்யக் கடவாய்; அவர் உனக்குக் கிருபை செய்வார்" என்ருள்.

3. துருவன் காசிக்குப் போய்ச் சிவபிரானைப் பூசை செய்தான். சிவபெருமான் அவனுக்கு மேலான ஒரு உலகத்தைக் கொடுத்தார். அவன் அந்த உலகத்தில் இருந்து அதிகாரத்தைச் செலுத்துகின்ருன்.

"சான்ருே ரென்கை யீன்ருேட் கடகு"

---

97946

11-ம் பாடம்

## ஆண்பனைகள் பெண்பனைகளானது

1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் திருவோத்தூர் என்னும் தலத்துக்குச் சென்ருர். அங்கே சுவாமியைத் தரிசித்துக் கொண்டு இருந்தார். அந்தத் தலத்தில் ஒரு சிவனடியார் இருந்தார். அவர் சிவபெருமானுக்குப் பனைகள் உண்டாக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகளுள் பெண்பனைகள் ஒன்றும் இல்லை. எல்லாம் ஆண்பனைகளாகவே வளர்ந்தன.

2. அந்த அடியவர் நாயனுரை வணங்கி "அடியேன் ஆக்குகின்ற பனைகள் எல்லாம் ஆண்பனைகளாய், காயாதிருக்கின்றன. சமணர்கள் அதுகண்டு நீர் உண்டாக்கும் ஆண்பனைகளையெல்லாம் காய்க்கச் செய்தல் கூடுமோ என்று சிரித்துச் சொன்னுர்கள். தேவரீர் அருள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

3. நாயனுர் கோயிலிற் சென்று தேவாரத் திருப்பதிகம் பாடினுர். அதனுல் ஆண்பனைகள் எல்லாம் குரும்பைக் குலைகளையுடைய பெண்பனைகள் ஆயின.

---

12-ம் பாடம்

## கங்காதரன்

1. ஒருநாள் உமாதேவியார் சிவபெருமானுடைய திருக்கண்களைத் தமது கைகளினுலே பொத்தினுர். உடனே எவ்விடமும்



ஒளி நீங்கி இருளாயது. சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணை விழித்தார். எங்கும் ஒளி உண்டாயது.

2. உமாதேவியார் பயந்து சிவபெருமானது கண்களைப் பொத்திய இரண்டு கைகளையும் எடுத்தார். உமாதேவியாரது கைவிரல்களில் இருந்து வேர்வை உண்டாயது. அது பத்துக் கங்கைகளாய் உலகத்தை அழிக்கும்படி பாய்ந்தது.

3. அதனுல் உயிர்கள் துக்கப்பட்டன. தேவர்கள் சிவபெருமானை வணங்கினுர்கள். சிவபெருமான் கங்கையைத் தமது திருமுடியில் தரித்தருளினுர்.

---

13-ம் பாடம்

## பதக்கம் சாத்தியது

1. சோழதேசத்திலே உறையூர் என்னும் ஒரு பட்டணம் உண்டு. அந்தப் பட்டணத்திலே ஒரு சோழராசன் இருந்து அரசாட்சி செய்துவந்தான். அவன் சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானிடத்து மிக்க அன்புள்ளவன். அவன் கோயில்களுக்குப் பூசையும் திருவிழாவும் செய்விப்பவன். அவன் ஒருநாள் காவிரி ஆற்றுக்கு ஸ்நானம் செய்யச் சென்றான். செல்லும் பொழுது, தான் அணிந்திருந்த பதக்கத்தைச் சிவபெருமானுக்குச்சாத்தவேண்டுமென்று நினைத்தான்.

2. இராசா ஆற்றில் முழுகிய பொழுது பதக்கம் வழுவி நீரில் விழுந்துவிட்டது. அரசன் அதனை அறிந்து துக்கங் கொண்டு, "கடவுளே! நான் பதக்கத்தைத் தேவரீருக்கென்றே நினைத்தேன், அது வழுவி ஆற்றில் விழுந்து விட்டது. அந்தப் பதக்கத்தைத் தேவரீர் அணிந்து கொள்ளுதல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தான். தான் செய்யவேண்டிய கடமைகளையுஞ் செய்தான். திருவானைக்காவில் உள்ள கோயிலுக்கு நடந்து சென்று, பூமியில் விழுந்து நமஸ்கரித்து உள்ளே போனான்.

3. அப்பொழுது சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்குக் காவிரி நீரை அள்ளிக் கொண்டு வந்து உள்ளே தொண்டு



செய்பவர்கள் கொடுத்தார்கள். சிவபெருமானுடைய கிருபையினால் பதக்கமும் நீரோடு குடத்துட் புகுந்திருந்தது. குருக்கள் நீர்க்குடத்தை வாங்கி அபிஷேகஞ் செய்தார். பதக்கம் சுவாமியுடைய திருமுடியில் விழுந்தது. குருக்கள் சந்தோஷங் கொண்டார்.

4. அரசன் திருமுடியில் விழுந்திருந்த பதக்கத்தைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினான். எல்லோரும் அரசனுடைய அன்பைக் கண்டு அதிசயித்தார்கள். அரசன் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கிக் கொண்டு தனது நகரத்திற் சென்று இருந்தான்.

14-ம் பாடம்

## கடவுள்

1. கடவுள் ஒருவரே உலகத்துக்குக் கர்த்தா. அந்தக் கடவுள் சிவபெருமான். அவரே நம்மைப் படைத்தவர். நம்மைக் காப்பவரும் அவரே. நமக்கு வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்கள் யாவற்றையும் தருபவரும் அவரே

2. அவர் எங்கும் நிறைந்தவர். அவர் இல்லாத இடம் இல்லை; அவர் எல்லாம் அறிபவர். அவர் அறியாதது ஒன்றும் இல்லை. அவர் எல்லாம் வல்ல வர், அவரால் இயலாதது ஒன்றும் இல்லை. அவர் என்றும் உள்ளவர். அவர் பிறத் தலும் இல்லை. இறத்தலும் இல்லை.

3. உமாதேவியார் சிவபெருமா னுடைய சக்தி. விநாயகக்கடவுள், வீரபத் திரக் கடவுள், வைரவக்கடவுள், சுப்பிர மணியக் கடவுள் என்னும் நால்வரும் சிவ பெருமானுடைய திருக்குமாரர்கள் எனப் படுவர்.

4. நாம் ஒவ்வொருவரும் தினந்தோ றும் கோயிலுக்குப் போய், கடவுளை வழி படல் வேண்டும். கடவுளை வழிபடுவோர் அவருடைய கிருபையைப் பெற்று முத்தி யின்பத்தைப் பெறுவார்கள்.

"ஆலயந் தொழுவது சாலவு நன்று"
"வையந் தோறுந் தெய்வந் தொழு"

15-ம் பாடம்

## காவிரிநதி

1. இந்திரன் என்பவன் தேவர்களுக் குத் தலைவன். அவன் பூமியிலே உள்ள சீகாழியில் வந்திருந்தான். அங்கே இருந்து சிவபூசை செய்வதற்காகப் பூமரங்களை உண்டுபண்ணினான்.

2. அவை மழை இல்லாமையால் வாடின. அதனால் மனம் வருந்தினான். ஒரு நாள் நாரத முனிவர் அவனிடத்தில் போனார். அவருக்குத் தன்னுடைய குறையை விண்ணப்பித்தான்.

3. "நீ விநாயகக் கடவுளைப் பூசை செய். அகத்திய முனிவருடைய கமண்ட லத்தில் பொன்னிநதி இருக்கிறது. விநா யகர் அந்த நதியை இந்தச் சோலையில் விடுவார்" என்று நாரதமுனிவர் சொன்னார்.

4. இந்திரன் விநாயகரைப் பூசித்தான். அவர் வந்தருளினார். இந்திரன் வணங்கி, "சுவாமி! அகத்திய முனிவருடைய கமண் டலத்தில் இருக்கும் நதியைத் தந்தருள



97946

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்" என்று வேண்டுதல் செய்தான். விநாயகக் கடவுள் காக வடிவுகொண்டு சென்றார். கமண்டலத்தின் மேலிருந்து கவிழ்த்து விட்டார். அந்த நதி பூமியில் பாய்ந்து சென்றது.

5 அப்பொழுது விநாயகக் கடவுள் ஒரு சிறுவனைப்போலத் திரிந்தருளினர். அகத்திய முனிவர் கோபங்கொண்டார். அவரைக் குட்டுதற்குத் தொடர்ந்தார். கடவுள் அகப்படவில்லை. முனிவர் சரீரம் இளைத்து நின்றார். விநாயகக் கடவுள் தமது திரு உருவத்தைக் காட்டியருளினர். முனிவர் தமது சிரசில் குட்டினர். விநாயகர் முனிவருக்குப் பல வரங்களைக் கொடுத்து மறைந்தருளினர்.

6. விநாயகக் கடவுள் கவிழ்த்த நதி சீகாழியில் பாய்ந்து சென்றது. திருநந்தன வனத்திற் புகுந்தது. பூமரங்கள் தழைத்துப் புஷ்பித்தன. இந்திரன் சிவபெருமானைப் பூசைசெய்திருந்தான்.

"கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே."

---

16-ம் பாடம்

## இரணியவன்மர்

1. கௌடம் என்று ஒரு தேசம் உண்டு. அங்கே ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தவன் பெயர் சிங்கவன்மன். குட்டநோய் அவனை வருத்தியது. வைத்தியர்கள் மருந்து கொடுத்தார்கள். சுகப்படவில்லை

2. இது கடவுளால் சுகப்படவேண்டும் என்று நினைத்தான். நினைத்து சிதம்பரத்துக்குப் போனன். அங்கே வியாக்கிரபாத முனிவர் இருந்தார். அவரை வணங்கினன். அவர் அவனைச் சிவகங்கையில் ஸ்நானம் பண்ணச் செய்தார். உடனே குட்டநோய் நீங்கியது. சரீரம் பொன் நிறமாயது. இரணியவன்மர் என்ற பெயரைப் பெற்றார்

3. இரணியவன்மர் பலகாலம் நடராசரை வணங்கிக் கொண்டிருந்தார். சிவபெருமானுக்குக் கோயில் கட்டுவித்தார். பூசை திருவிழா முதலியவைகளைச் செய்வித்தார். அங்கே இருந்து முத்தி அடைந்தார்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17-ம் பாடம்

## கிருஷ்ணர்
## வெண்ணெய் திருடியது

1. யசோதை என்பவளுக்குப் புத்திரனாய் வளர்ந்த கிருஷ்ணர் இடையர்களுடைய வீடுகளுட் செல்லுவார். அவர்கள் கறந்துவைத்த பாலை ஊற்றிவிடுவார். பால் கறப்பதற்குமுன் கன்றுகளை அவிழ்த்து விடுவார். உறியில் இருக்கும் வெண்ணெய்ப் பாத்திரங்களை உடைப்பார். வெண்ணெயை உண்டு விடுவார். எஞ்சிய வெண்ணெயைப் பூனைகளுக்கும் குரங்குகளுக்கும் கொடுப்பார்.



2. ஒருநாள் ஒரு இடைச்சி வீட்டில் வெண்ணெய் திருடிக்கொண்டு இருந்தார். அவள் அவரைப் பிடித்துத் தாயிடம் கொண்டு வந்தாள். தான் பிடித்திருப்பது தன் மகனை இருக்கக்கண்டு வெட்கம் அடைந்தாள். கிருஷ்ணர் ஒன்றும் அறியாதவர் போல் விளையாடிக் கொண்டு இருந்தார்.



3. தாய் அவரை எடுத்துப் பால்கொடுத்துக்கொண்டு இருந்தாள். அடுப்பில் வைத்திருந்த பால் பொங்கி வழிந்தது. யசோதை அவரைக் கீழே விட்டாள். அடுப்பருகிற் போனாள். கிருஷ்ணருக்குக் கோபம் உண்டாயது. அவர் தமது கையால் தயிர்ப் பானையை உடைத்தார். தயிர் பெருகிச் சென்றது. கிருஷ்ணர் ஒளித்தார்.

4. தயிர்ப்பானை உடைந்திருப்பதை யசோதை கண்டாள். கிருஷ்ணரைத் தேடினாள். அவர் ஒரு மூலையில் மறைந்திருப்பதைக் கண்டாள். அவரைப் பிடித்து உரலுடன் கட்டினாள். கிருஷ்ணர் கண்களைக் கசக்கி அழுதார். ஒருவரும் அவிழ்த்து விடவில்லை. உரலையும் இழுத்துக் கொண்டு தவழ்ந்து சென்றார்.

5. சிறிது நேரம் சென்றபின் தாயும் கோபம் நீங்கி, அவரை அவிழ்த்து விட்டாள். கிருஷ்ணர் துள்ளிக் குதித்து, சிரித்து விளையாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18-ம் பாடம்

## கன்றால் விளவு எறிந்தது

1. ஒரு நாள் கிருஷ்ணரும் இடையர்களும், பசுக்களையும் கன்றுகளையும் மேய்த்துக் கொண்டு நின்றார்கள். அப்பொழுது கஞ்சன் என்பவன், கிருஷ்ணரைக் கொல்லுமாறு, ஒரு அசுரனை அனுப்பினான்.

2. அவன், ஒரு பசுக்கன்று வடிவாகி, மேய்ந்துகொண்டு நின்ற பசுக்களோடு சேர்ந்து நின்றான். அதைக் கிருஷ்ணர் கண்டார். தமையனாகிய பலராமருக்குக் காட்டினார்.

3. பின்பு அம் மாயக் கன்றின் கால்களைப்பிடித்துத் தூக்கிச் சுழற்றினார். பக்கத்தில் நின்ற விளாமரத்தின் மேல் எறிந்தார். அம் மரத்தில் இருந்த விளாங்காய்கள் உதிர்ந்தன.

4. அப்பொழுது, கன்றுவடிவு கொண்டு வந்த அவுணன், சொந்த வடிவுடன் பூமியில் விழுந்து இறந்தான். இதனைக் கண்ட இடையர், கிருஷ்ணரைப் புகழ்ந்தார்கள்.

---

19-ம் பாடம்

## தலையைக் கல்லில் மோதியவர்

1. காஞ்சிபுரத்திலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் வண்ணார்குலத்திற் பிறந்தவர். அவர் பெயர் திருக்குறிப்புத் தொண்டர். அவர் சிவனடியார்களுக்கு வஸ்திரம் தோய்த்துக் கொடுப்பவர்.

2. ஒரு நாள் சிவபெருமான் சிவனடியார் வேடங்கொண்டு அவரிடத்தில் போனார். சிவனடியார் ஒரு கந்தை வஸ்திரம் உடுத்திருந்தார். அது அழுக்காய் இருந்தது. நாயனார் அவரை வணங்கி, "உந்தக் கந்தையைத் தாரும், வெள்ளையாக்கித் தருகிறேன்" என்றார்.

3. சிவனடியார், "குளிர் மிகுதியாயிருக்கிறது; இந்தக் கந்தையைக் கைவிடக் கூடாது" என்றார்.

4. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் அஸ்தமயனத்துக்குமுன் கொண்டுவந்து தருகிறேன்" என்றார். சிவனடியார், அக் கந்தையை அவர் கையிற் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நாயனார், அதை ஒரு குளத்துக்குக் கொண்டு போனார். முன் சிறிது அழுக்கைப் போக்கினார். வெள்ளாவியில் வைத்தார். பின் வெளுக்கத் தொடங்கினார். சிவபெருமானுடைய அருளால் மழை பெய்தது. திருக்குறிப்புத்தொண்டர் கவலை கொண்டார். விரைவில் மழைவிடும் என்று அங்கே நின்றார். அது விடவில்லை. இராக் காலம் வந்தது.

6. திருக்குறிப்புத் தொண்டர், குளிரில் நடுங்குகின்ற அடியாருக்குச் செய்ய விரும்பிய பணிவிடை தவறிவிட்டது என்று துக்கித்தார். துக்கித்து, சீலை அடிக்கும் கல்லின்மேல் தமது தலையை மோதினார். உடனே, சிவபெருமானுடைய திருக்கரம் தோன்றியது. அது, அவரைப் பிடித்துக் கொண்டது. மழை நீங்கியது. சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்தருளினார்.

20-ம் பாடம்

## கணநாதநாயனார்

1. சீகாழியிலே கணநாத நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பிராமணர். அவர் சிவபெருமானுக்கு எப்பொழுதும் பணிவிடை செய்பவர். பலர் அவரை விரும்பி வந்து சேருவார்கள்.

2. திருக்கோயில்களுக்கு நந்தனவனம் வைக்கச் சிலரைப் பழக்குவார். பூக்கொய்யச் சிலரைப் பழக்குவார். சிலரைத் திருமாலை கட்டப் பழக்குவார். சிலரைத் திருவலகிடப் பழக்குவார். சிலரைத் திருமெழுக்கிடப் பழக்குவார். சிலரைத் திருவிளக்கேற்றப் பழக்குவார். சிலரைத் தேவாரம் முதலிய திருமுறைகளை எழுதப் பழக்குவார். சிலரை வாசிக்கப் பழக்குவார். அவர்களைச் சிவனடியார்களாக்குவார்.

3. அவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரைத் தினமும் பூசிப்பவர். இந்தப் புண்ணியத்தினால் திருக்கைலாசத்தை அடைந்தார்.



97946

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 - ம் பாடம்

## ஒரு புலவர்

1. திருக்கடவூரிலே, காரிநாயனார் என்பார் ஒருவர் இருந்தார். அவர் தமிழ்ப் பாஷையில் வல்லவர். தம் பெயரினாலே ஒரு தமிழ் நூல் பாடினார். தமிழ் அரசர்களிடத்திலே போவார். அதற்கு விளக்கமாகப் பொருள் சொல்வார். அவர்கள் மனம் மகிழுவார்கள்; திரவியங்களைக் கொடுப்பார்கள்.

2. காரிநாயனார், அந்தத் திரவியங்களைக் கொண்டு, பல சிவாலயங்களைக் கட்டுவித்தார். சிவனடியார்களுக்கும் கொடுத்தார். உலகமெங்கும் அவருடைய புகழ் பரவியது. அவர் திருக்கைலாச மலையை அடைந்தார்.

---

22 - ம் பாடம்

## தீபாவளி

1. முற்காலத்திலே, ஒரு அவுணன் இருந்தான். அவன் பெயர் நரகாசுரன். அவன் ஒரு துட்டன். அவன் உயிர்களை வருத்தினான். விட்டுணு அவனைக் கொன்றார். அவனுக்கு நல்லறிவு வந்தது. இறக்கும் பொழுது இவ்விதம் கேட்டுக் கொண்டான்.

2. "இத் தினம் உலகத்துக்கு நன்மையும் சந்தோஷமும் கொடுக்கும்படி இருக்க வேண்டும். எங்கும் அதிகமாகத் தீபம் ஏற்ற வேண்டும். அதிகாலையில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும். கோடி வஸ்திரம் உடுத்தல் வேண்டும்" என்பதாம். விட்டுணு அவனுக்கு அருள் செய்தார்.

3. ஐப்பசி மாதத்தில், தீபாவளிக் கொண்டாட்டம், இப்பொழுதும் நடைபெற்று வருகின்றது.

---

97946

2884 cc

23 - ம் பாடம்

## சற்புத்திரன்

1. சற்புத்திரன் என்னும் பெயரையுடைய ஒரு செட்டி இருந்தான். அவன் சுப்பிரமணியக் கடவுளிடத்தில் அன்புள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன். அவன் வெகு பிரயாசத்துடன் கதிர்காம யாத்திரை செய்துகொண்டு வழியிற் சென்றான்.

2. ஒரு நாள் யானையொன்று வழியில் தடை செய்தது. அது துதிக் கையால் அவனைத் தூக்கியது. அச் சற்பு திரன் "கதிர்காம வேலனே! கதிர்கா வேலனே!" என்று சத்தமிட்டு அழை தான்.

3. சுப்பிரமணியக் கடவுள் வேட்டு வடிவங் கொண்டு சீக்கிரமாக வந்த தமது வேற்படையைச் செலுத்தி, அத் யானையைக் கொன்றார். செட்டியை ய யினது கையினின்றும் விடுவித்தருளினார்.

4. சற்புத்திரன் கந்த சுவாமியை நினைத்துக் கொண்டு கதிர்காமம் போயி னான். அங்கே மாணிக்க கங்கையில் ஸ்நா னம் செய்து, சுப்பிரமணியக் கடவுளை வணங்கினான்.

M. SIVARASA

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org